செ. கு. எண்: 74

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 14.3.2013

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையம் வட்டம், கணக்கம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. தவசியப்பன் என்பவரின் மனைவி பச்சியம்மாள், 4.3.2013 அன்று காட்டு யானையால் தாக்கப்பட்டு பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், பர்கூர் கிராமம், எலச்சிப்பாளையத்தைச் சேர்ந்த திரு. ஈரண்ணன் என்பவரின் மகன் கெஞ்சகவுடர், 6.3.2013 அன்று அன்று காட்டு யானையால் தாக்கப்பட்டு பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டத்தைச் சேர்ந்த திரு. கிருஷ்ணகுட்டி என்பவரின் மனைவி செல்லம்மாள், பொள்ளாச்சி வனக்கோட்டம், ஆனைமலை புலிகள் காப்பகம், வால்பாறை வனச்சரகம் அருகே 8.3.2013 அன்று காட்டு எருமையால் தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், தேவாலா கிராமத்தில் இயங்கி வரும் பாண்டியார் தேயிலை தோட்டத்தில் தொழிலாளர்கள் மேற்பார்வையாளராகப் பணி புரிந்து வந்த திரு. ராமகிருஷ்ணன், 9.3.2013 அன்று காட்டு யானையால் தாக்கப்பட்டு பலத்த காயமடைந்து

மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானைகள் தாக்கியதில் அகால மரணமடைந்த பச்சியம்மாள், கெஞ்சகவுடர் மற்றும் ராமகிருஷ்ணன், காட்டு எருமை தாக்கியதால் அகால மரணமடைந்த செல்லம்மாள் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த பச்சியம்மாள், கெஞ்சகவுடர் ராமகிருஷ்ணன் மற்றும் செல்லம்மாள் ஆகியோரின் குடும்பங்களுக்கு வனத் துறை மூலம் தலா மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**